C38

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2009

**ESP 2312 – கல்வி தத்துவ மற்றும் சமூக அடிப்படைகள்**

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 08.02.2009 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

ஏதேனும் **மூன்று(03)** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (i) வேலை உலகுடன் தொடர்புடையதான கல்வியின் **மூன்று(03)** தொழிற்பாடுகளைக் கூறுக. (08 புள்ளிகள்)

(ii) 2007 கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் இந்நாட்டில் கல்வியை வேலை உலகுடன் தொடர்புபடுத்த அறிமுகஞ் செய்யப்பட்ட முனைப்புகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) மேற்படி முனைப்புகளில் மூன்றினைத் தெரிவு செய்து அவற்றை வேலை உலகுடன் இணைக்கும்போது ஏற்படக்கூடிய பிரச்சினையினை எவ்வாறு வெற்றிகரமாக தீர்க்கலாம் அல்லது குறைக்கலாம் என்பதுபற்றி விமர்சனரீதியாக ஆராய்க. (15 புள்ளிகள்)

02. (i) இலங்கையின் சமகால கல்விப்பிரச்சினைகளை/எழுவினாக்களை வேறு இரண்டு தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் கல்விப்பிரச்சினைகளுடன்/எழுவினாக்களுடன் ஒப்பிடுக. (08 புள்ளிகள்)

(ii) இலங்கையின் கல்விக் கொள்கையினைத் திட்டமிடும் போது மேற்படி பிரச்சினைகள்/எழுவினாக்களுக்கு கவனம் செலுத்தப்பட்டது என நீங்கள் கருதுகிறீர்களா? தங்களது விடைக்கு காரணம் கூறுக. (10 புள்ளிகள்)

(iii) மேற்படி பிரச்சினைகளை/எழுவினாக்களை தீர்க்க ஏற்பாடுகளை முன் மொழிக. (15 புள்ளிகள்)

03. (i) பன்மைக்கலாசார கல்வி என்பதை நீங்கள் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துவீர்களா? (08 புள்ளிகள்)

(ii) பன்மைக்கலாசார கல்வியுடன் தொடர்புடைய உடன்பாடான விளைவுகளையும் சிரமங்களையும் பட்டியலப்படுத்துக. (10 புள்ளிகள்)

(iii) இலங்கையில் பன்மைக்கலாசார கல்வியை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஆராய்க. (15 புள்ளிகள்)

04. (i) “கல்வியானது சமூகத்தின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கிறது”, இக்கூற்றினை ஆராய்க. (08 புள்ளிகள்)

(ii) “இன்றைய இலங்கைச் சமூகத்தின் ஒழுக்கங்களும் விழுமியங்களும் சீரழிவுற்றமைக்கு கல்வி வகை கூற வேண்டும்.” மேற்படி கூற்றினை ஆராய்க. இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா அல்லவா என்பதை விளக்குக? (10 புள்ளிகள்)

(iii) மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை விருத்தி செய்வதில் ஆசிரியர் வகிபங்கை ஆராய்க. (15 புள்ளிகள்)

05. (i) தலைமுறைக்குள்ளான மற்றும் தலைமுறைகளுக்கிடையிலான நகர்வினை வேறுபடுத்திக் காட்டுக. (08 புள்ளிகள்)

(ii) கீழ்மட்ட சமூக வகுப்புக்களைச் சார்ந்த பிள்ளைகள் தமது முறைசார் கல்வியினை பூரணப்படுத்துவதற்கு தடையாக உள்ள பாடசாலை செயன்முறைகளை அடையாளம் கண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) “சமகால கல்வி முறைமை தனிநபர்களின் சமூக நகர்வுக்கு வழிப்படுத்துகிறது.” இலங்கையை அடிப்படையாகக் கொண்டு மேற்படி கூற்றினை பகுப்பாய்வு செய்க. (15 புள்ளிகள்)

06. (i) “மனித அபிவிருத்தி” என்னும் பதத்தினை வரையறை செய்க. (08 புள்ளிகள்)

(ii) இலங்கையில் மனித அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்த ஏற்பாடுகள் யாவை? (10 புள்ளிகள்)

(iii) இலங்கையில் மனித அபிவிருத்தியை தடைசெய்யும் மூன்று(03) காரணிகளை இனங்கண்டு அவற்றின் தாக்கத்தை குறைப்பதற்கான முன்மொழிவுகளைத் தருக. (15 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)